**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 218/2021**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 17.02.2026 | | |
| பெயர்: | ராஜகுமார்<br>(PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | அண்ணாசாமி |
| கிராமம்: | தென்பாதி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | நடத்துனர் ஓய்வு | வயது : | 64/2026 |

<u>**முதல் விசாரணை : 17.02.2026**</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. தாவா சொத்தை பொறுத்து எனது தந்தை குத்தகை செலுத்தியதற்கான ரசீதுகள் (எண்ணிக்கை 12) **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 11.09.1971 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்து எனது தந்தைக்கு நில வார உரிமை தனி தாசில்தார் கொடுத்த அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. தாவா சொத்தை பொறுத்த கணினி பட்டா **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 15.03.2019 தேதியிட்ட கணினி பட்டா **வா.சா.ஆ.4** ஆகவும்

5. 29.05.2020 தேதியிட்ட சீர்காழி காவல் நிலைய மனு ரசீது அசல் **வா.சா.ஆ.5** ஆகவும்

6. 12.03.2021 தேதியிட்ட தாவா சொத்திற்கு எனது பெயரிலான கிஸ்தி ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆகவும்

7. 08.08.2020 தேதியிட்ட பாகசாலை காவல் நிலைய மனு ரசீது அசல் **வா.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.